வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 03.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேங்காக்-கில், தாய்லாந்து பிரதமரை சந்தித்து பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன் பேங்காக்கில் நாளை நடைபெற உள்ள பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில், வளமான, திறந்தநிலை பிம்ஸ்டெக் பிராந்தியம் என்பது குறித்து, விவாதங்கள் இடம்பெற உள்ளன.

மக்களவையில் நேற்று இரவு நிறைவேற்றப்பட்ட, வக்ஃபு திருத்த மசோதா, இன்று மாநிலங்களவையில், விவாதங்கள் மற்றும் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி ஜிப்மரில், மருத்துவ மாணவர்களுக்கான 3 நாள் கன்னாய்சான்ஸ் மாநாடு, நாளை தொடங்க உள்ளது.

------------------

மோடி தாய்லாந்து 1 (17)

6ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து சென்றுள்ள, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை பேங்காக்-கில், இருதரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்தார். இருதரப்பு உறவுகளில், உத்வேகத்தை தூண்டுவதற்கான வழிமுறைகள் குறித்தும், பிராந்திய மற்றும் பல தரப்பு பிரச்சனைகள் குறித்தும், இரு தலைவர்களும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். 2016ஆம் ஆண்டு, தாய்லாந்து மன்னர் 9ஆம் ராமரின் 70 ஆண்டு ஆட்சியைக் குறிக்கும் வகையில் அந்நாட்டு அரசால் வெளியிடப்பட்ட, சரியான பாலி உச்சரிப்புடன்

கூடிய, திரிபிடகம் என்னும் பௌத்த புனித நூலின் பிரதியை, தாய்லாந்து பிரதமர், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பரிசளித்தார்.

இந்த சந்திப்பை தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, 6 ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின. தகவல்-தொழில்நுட்பம், கைவினை-கைத்தறி, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்ந்த ஒப்பந்தங்கள், இதில் அடங்கும்.

முன்னதாக இன்று காலை, பேங்காக் விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் திரு. நரேந்திர மோடியை, தாய்லாந்து துணை பிரதமர் வரவேற்றார். தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு

மோடி தாய்லாந்து 2 (14)

அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. தாய்லாந்தில் உள்ள இந்திய சமூகத்தினரும், பிரதமர் தங்கி உள்ள விடுதியில் அவரை சந்தித்து, பாரம்பரிய கார்பா நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன், வரவேற்று அளித்தனர்.

தாய்லாந்தில் தமக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், மகிழ்ச்சி தெரிவித்தார். இப்பயணத்தின் போது இந்தியாவிற்கும், தாய்லாந்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு உறவுகளை வலுப்படுத்த தாம் ஆர்வம் கொண்டுள்ளதாகவும், அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேங்காக்கில், தாய்லாந்து ராமாயண நாடகத்தையும் பார்த்து ரசித்தார். ஆசியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மனங்களையும், மரபுகளையும், ராமாயணம் தொடர்ந்து ஒருங்கிணைப்பதாக, சமூக ஊடகத்தில் பிரதமர் கூறியுள்ளார். பிரதமரின் தாய்லாந்து பயணம் மற்றும் பிம்ஸ்டெக் மாநாடு குறித்து,கூடுதல் விவரங்கள்....

மோடி தாய்லாந்து 3 (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன் பேங்காக்கில் நாளை நடைபெற உள்ள 6ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில், வளமான, நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, திறந்தநிலை பிம்ஸ்டெக் பிராந்தியம் என்ற கருப்பொருள் அடிப்படையில், முக்கிய விவாதங்கள் இடம்பெற உள்ளன. 2030ஆம் ஆண்டிற்கான பேங்காக் தொலை நோக்கு அறிக்கை இம்மாநாட்டில் வெளியிடப்படும். பிம்ஸ்டெக் நாடுகளுக்கு

இடையிலான, புகழ்மிகு அறிஞர்கள் குழுவின் அறிக்கையும், மாநாட்டின் போது ஏற்கப்படும். 2016 மற்றும் 19ஆம் ஆண்டுகளுக்கு பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தாய்லாந்து செல்வது இது 3ஆவது முறையாகும். இப்பயணத்தின் போது அவர் பேங்காக்கில், தாய்லாந்து மன்னர் மற்றும் ராணியையும் சந்திப்பார் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

மோடி தாய்லாந்து 4 (7)

பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை பேங்காக்கில் இருந்து, 3 நாள் பயணமாக இலங்கை செல்கிறார். இலங்கை அதிபரின் அழைப்பின் பேரில், இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது பதவி காலத்தில் இலங்கை செல்வது இது 4ஆவது முறையாகும். அண்டை நாடுகளுக்கு முதலிடம் அளிப்பதான, இந்தியாவின் கொள்கையில், ஒருங்கிணைந்த பகுதியாக இலங்கை திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

------------------

ராஜ்நாத் மலையேற்றம் (12)

எவரெஸ்ட் சிகரத்திற்கான இந்திய ராணுவக் குழுவினரின் மலையேற்றப் பயணத்தையும், கஞ்சன்ஜங்கா சிகரத்திற்கான, இந்தோ-நேபாள் கூட்டு ராணுவக் குழுவினரின் மலையேற்றப் பயணத்தையும், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில் இருந்து, கொடியசைத்து தொடக்கி வைத்தார். அதி உயர மலையேற்ற சாகசத்தில், இந்தியாவின் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி, இளைஞர்களை ஊக்குவிப்பதாக, இப்பயணங்கள் அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். எவரெஸ்ட் சிகரத்திற்கான இந்திய ராணுவத்தின் மலையேற்றக் குழுவில், லெப்டினென்ட் கர்னல் மனோஜ் ஜோஷி தலைமையில், 34 மலையேற்ற வீரர்களும், கஞ்சன்ஜங்கா சிகரத்திற்கான, இந்தோ-நேபாள் கூட்டு ராணுவக் குழுவில், கர்னல் சர்ஃபராஸ் சிங் தலைமையில், 18 மலையேற்ற வீரர்களும், இடம்பெற்றுள்ளனர்.

------------------

சேமநல நிதி (7)

பொது சேமநல நிதி என்னும் PPF கணக்குகளில், வாரிசுதாரர் விவரங்களை மாற்றுவதற்கான 50 ரூபாய் கட்டணத்தை ரத்து செய்யும்

வகையில், சேமிப்புகளை பெருக்குவதற்கான அரசின் பொது விதிமுறைகளை, மத்திய நிதியமைச்சகம் திருத்தி அமைத்துள்ளது. இதற்கான அரசிதழ் அறிவிக்கை நேற்று வெளியிடப் பட்டுள்ளதாக, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

------------------

வக்ஃபு-மாநிலங்களவை 1 (17)

மக்களவையில் நேற்று இரவு நிறைவேற்றப்பட்ட, **வக்ஃபு திருத்த மசோதா**, இன்று மாநிலங்களவையில் விவாதங்கள் மற்றும் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, மசோதாவை அவையில் கொண்டு வந்து பேசுகையில், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன், விரிவான முறையில் ஆலோசித்து, கூட்டு நாடாளுமன்றக் குழுவிலும் விவாதித்த பின்னரே, அரசு இம்மசோதாவை கொண்டு வந்திருப்பதாக கூறினார். **வக்ஃபு வாரியங்கள்** தொடர்பான சொத்துக்கள் குறித்து மட்டுமே இம்மசோதாவில் பேசப் படுவதாகவும், முஸ்லீம்களின் மத நடைமுறைகளுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மசோதா குறித்த எதிர்கட்சிகளின் ஆட்சேபனைகளை அவர் நிராகரித்து, **வக்ஃபு சொத்துக்களின்** நிர்வாகத்தில், முஸ்லீம் அல்லாதவர்கள் தலையிடுவார்கள் என்பது சரியல்ல என்றும், வக்ஃபு சொத்துக்களால், முஸ்லீம்கள் மட்டுமே பயன் பெறுவார்கள் என்றும், கூறினார். புதிய மசோதாவின் படி, வக்ஃபு வாரியத்தில், அனைத்து முஸ்லீம் சமுதாயப் பிரிவுகளின் பிரதிநிதிகளும், பெண்களும் இடம்பெறுவார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வக்ஃபு-மாநிலங்களவை 2 (10)

காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் **சையது நசீர் உசேன்**, மசோதாவை ஆட்சேபித்து அவையில் பேசுகையில், சமூகத்தை பிளவுபடுத்த பிஜேபி முயல்வதாக குற்றம் சாட்டினார். எதிர்கட்சிகள்தான், மக்களை தவறானப் பாதையில் இட்டுச் செல்வதாக, உள்துறை அமைச்சர் திரு. **அமித் ஷா**, இடையிட்டுக் கூறினார். குறிப்பிட்ட சமூகத்தினரைக் குறி வைக்கும் விதத்தில், மசோதா அமைந்து இருப்பதாக, திமுக உறுப்பினர் திரு. **திருச்சி சிவா** எதிர்ப்பு தெரிவித்தார். இம்மசோதா மதசார்பின்மை மற்றும் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும் அவர் கூறினார். சீர்திருத்தம்

என்ற பெயரில், வக்ஃப்பு வாரியங்களின் அடையாளமே சிதைக்கப் படுவதாக, திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. முகமது நதிமுல் ஹக் குற்றம் சாட்டினார்.

ஆயினும் ஏழை முஸ்லீம்களின் நலன்களை மேம்படுத்தவே, பிரதமர் திரு. நரேந்திர மோடி இம்மசோதாவை கொண்டு வந்து இருப்பதாக, பிஜேபி உறுப்பினர் திரு. ராதா மோகன் தாஸ் கூறினார். விவாதங்கள் தொடர்கின்றன.

-----------------

*மசோதா கருத்து (14)*

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் பலரும், வக்ஃப்பு திருத்த மசோதாவை வரவேற்றுள்ளனர். மத்திய-மாநில வக்ஃப்பு வாரியங்களில், தற்போது நிலவும் ஊழல், தவறான நிர்வாகம், சட்டப்பூர்வ மேற்பார்வையில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளை தீர்க்க, இம்மசோதா உதவிகரமாக இருக்கும் என்று, சட்டம் உள்ளிட்ட பல்வேறு அறிவுசார் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். சட்டத் துறை நிபுணரும், கர்நாடக சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவருமான திரு. அன்வர் மணிப்பாடி, ஆகாஷ்வாணி செய்தியாளரிடம் பேசுகையில், வக்ஃப்பு வாரிய முடிவுகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, உயர்நிலை நீதிமன்றங்களை அணுகும் அதிகாரத்தை, இம்மசோதா வழங்குவதாக கூறினார். வக்ஃப்பு வாரியங்களின் நிர்வாகத்தில், வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவர, புதிய மசோதாவினால் ஏதுவாகும் என்று, அகில இந்திய பஸ்மாந்தா முஸ்லீம் மஹாஜ் அமைப்பின் தலைவர் திரு. ஷாரிக் அதீப் கூறியுள்ளார்.

-----------------

*ஜிப்மர் (18)*

புதுச்சேரி ஜிப்மரில் நாளை தொடங்கும் 7ஆம் ஆண்டு கன்னாய்சான்ஸ் மாநாட்டில், நாடெங்கிலும் இருந்து, சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டு, கருத்தரங்கம், பயிலரங்கம், ஆய்வறிக்கை தாக்கல், மற்றும், பல்வேறு போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, ஆராய்ச்சிப் புலத் தலைவர் டாக்டர் தாப்பா ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, இந்த 3 நாள்

மாநாட்டின் தொடக்க விழாவில், **இந்தியப் பொது சுகாதார அமைப்பின்** தலைவர் டாக்டர் **சஞ்சய் ஜோட்பே**, தலைமை விருந்தினராக பங்கேற்கிறார். ஜிப்மரில் பயின்று, தற்போது அவரவர் மருத்துவத் துறையில் உயர்ந்த இடத்தை எட்டி உள்ள டாக்டர் **மது சசிதர்**, டாக்டர் **சமீர் பக்ஷி**, மற்றும், புகழ் பெற்ற இதர நிபுணர்களின் சிறப்பு உரைகளும் மாநாட்டில் இடம்பெற உள்ளன. நாடெங்கிலும் உள்ள மருத்துவ மாணவர்கள், தங்களின் கல்விச் சிறப்பு, ஆராய்ச்சித் திறன், மருத்துவ விவேகத்தை வெளிப்படுத்தும் அரங்கமாகவும், புதிய திறன்களை, நிபுணர்களிடம் இருந்து, நேருக்கு நேர் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாகவும், **கன்னாய்சான்ஸ் மாநாடு** அமையும் என, ஜிப்மர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------

*புதுச்சேரி மிரட்டல்* (9)

புதுச்சேரியில், வழுதாவூர் சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வெடிகுண்டு இருப்பதாக, இன்று மின்னஞ்சல் மூலம், மிரட்டல் பெறப்பட்டதை தொடர்ந்து, தன்வந்திர நகர் காவல் நிலைய போலீசார் மற்றும், வெடிகுண்டு தடுப்புப் பிரிவினர், மோப்ப நாய் உதவியுடன் உடனடி சோதனை மேற்கொண்டு, இது வெறும் புரளி என்பதை உறுதிப் படுத்தினர். தமிழகத்தில் சவுக்கு சங்கர் வீட்டில் மர்ம நபர்கள் புகுந்து பொருட்களை சூறையாடிய விவகாரத்தில், முறையான நடவடிக்கை இல்லாததை கண்டித்து, மர்ம நபரால் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப் பட்டதாக, காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

------------------

*வானிலை* (7)

தமிழ்நாடு, புதுச்சேரி,காரைக்கால், மாஹே, கர்நாடகா மற்றும் அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் ஓரிரு இடங்களில், இன்று கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக இந்தியா வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. அடுத்த 4-5 நாட்களில், நாட்டின் எந்தவொரு பகுதியிலும், வெப்ப அலை வீச வாய்ப்பில்லை என்று, இந்திய வானிலை ஆய்வுத் துறையின் முதுநிலை விஞ்ஞானி திரு. ஆர்.கே ஜெனாமணி, இன்று புதுடெல்லியில், ஆகாஷ்வாணி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

------------------

ஐபிஎல் (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா-ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு பெங்களூருவில் நடைபெற்ற போட்டியில், குஜராத் அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், பெங்களூரு அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

------------------

*ஹாக்கி (8)*

15ஆவது ஹாக்கி இண்டியா சீனியர் ஆடவர் தேசிய சேம்பியன் பட்டப் போட்டிகள், உத்தரபிரதேஷ் மாநிலம் ஜான்சியில், நாளை தொடங்க உள்ளன. வரும் 15ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டிகளில், A பிரிவில் 12 அணிகளும், B பிரிவில் 10, மற்றும், C பிரிவில் 8 அணிகளுமாக, மொத்தம் 30 அணிகள் பங்கேற்க உள்ளன. தொடக்க நாளான நாளை இடம்பெறும் போட்டிகளில், ராஜஸ்தான்-திரிபுரா, அருணாச்சல்-ஜம்மு காஷ்மீர், சட்டீஸ்கர்-குஜராத், மற்றும், ஹிமாச்சல்-பீகார் அணிகள் மோதுகின்றன.

------------------

மேற்குவங்கம் (15)

மேற்கு வங்கத்தில் உள்ள பள்ளிகளுக்கு, 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மற்றும், ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் நியமிக்கப் பட்டதை ரத்து செய்து, கொல்கத்தா உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவு செல்லுபடியாகும் என, உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பு அளித்துள்ளது. ஆள் சேர்ப்பு நடைமுறை முழுவதிலும், நம்பகத் தன்மை முற்றிலுமாகவே இல்லை என்றும், தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா, நீதிபதி திரு. சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, தனது தீர்ப்பில் கூறியது. புதிய ஆள் சேர்ப்பு நடைமுறைகளை, 3 மாதங்களுக்குள் நடத்தி முடிக்கவும், கறைபடியாத தேர்வர்களுக்கு, இதில் தளர்வு அளிக்கவும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மனிதாபிமான அடிப்படையில், மாற்றுத் திறனாளி ஊழியர்களை தொடர்ந்து பணியில் வைத்து இருக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேற்குவங்க ஆள் சேர்ப்பு விவகாரம் குறித்து, கொல்கத்தா உயர்நீதிமன்றத்தால், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப் பட்டதை ஆட்சேபிக்கும் மனு மீது, உச்சநீதிமன்றத்தில், நாளை, விசாரணை நடைபெறும்.

------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று **பேங்காக்-**கில், தாய்லாந்து பிரதமரை சந்தித்து பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கேற்புடன் பேங்காக்கில் நாளை நடைபெற உள்ள **பிம்ஸ்டெக்** உச்சி மாநாட்டில், **வளமான, திறந்தநிலை பிம்ஸ்டெக் பிராந்தியம்** என்பது குறித்து, விவாதங்கள் இடம்பெற உள்ளன.

மக்களவையில் நேற்று இரவு நிறைவேற்றப்பட்ட, **வக்ஃபு திருத்த மசோதா**, இன்று மாநிலங்களவையில், விவாதங்கள் மற்றும் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி ஜிப்மரில், மருத்துவ மாணவர்களுக்கான 3 நாள் **கன்னாய்சான்ஸ்** மாநாடு, நாளை தொடங்க உள்ளது.